# MY FOLLOWERS SHOULD BE THE ROLE MODEL TO HUMAN BEINGS

# என்னை பின்பற்றுகின்றோர்கள், மனித குலத்திற்கு முன்மாதிரிகையாக திகழவேண்டும்

**வெள்ளிக்கிழமை குத்து:பா** 13-01-2012

**FRIDAY SERMON**

## HAZRAT MUNIR AHMAD AZIM (A)

பூவுலகின் பல்வேறு பகுதிகளிலுள்ள தனது தோழர்களுக்கு சமாதான வாழ்த்துக்கள் தெரிவித்த பிறகு கலீஃபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் (அ) அவர்கள் தஷஹ்ஹீத்தும் தஅவ்வுசும் சூராஃபாத்திஹாவும் ஓதி கீழ் வருமாறு கூறினார்.

ஜமா அத்துச்சஹீஹில் இஸ்லாமை சார்ந்த ஒவ்வொரு நபர்களும் முஸ்லீம் ஆவார்கள். அவர்கள் ஏகனாகிய இறைவனில் நம்பிக்கைக் கொள்கின்றார்கள். தூயதூதர் முஹமது முஸ்தபா (ஸ) வில் நம்பிக்கை கொள்கின்றார்கள். வாக்களிக்கப்பட்ட மஸீஹான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அ) அவர்களிலும் நம்பிக்கை கொள்கின்றார்கள். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் அஹமது (அ) மின் தோற்றத்தை குறித்து ஹஸ்ரத் முஹமது முஸ்தபா(ஸ) தீர்க்கதரிசனம் செய்திருந்ததேயாகும். அவ்வாறே இறைவெளிப்பாடுகளுமாக இந்நூற்றாண்டில் (ஹிஜ்ரா பதினைந்தாம் நூற்றாண்டில்) அல்லாஹ் நியோகித்த கலீஃபத்துல்லாஹும் முஹ்யித்தீனுமான முனீர் அஹ்மது அஸீமிலும் அவர்கள் நம்பிக்கை கொள்கின்றார்கள்.

இந்நூற்றாண்டின் கலீஃபத்துல்லாஹ் ஆன நான் அல்லாஹ்வின் தூதனாவேன். இந்த பூர்ணமான இறை உண்மையின்பால் மானிடக்குலத்திற்கு நான் அழைப்பு விடுக்கின்றேன். ஆனால் இதனால் மட்டும் எல்லாம் முடிந்துவிடவில்லை. ஏனெனில் இஸ்லாம் என்பது செயல்பாடுகள் வழியாக வெளிபடுத்திக் காட்டவேண்டிய வாழ்க்கை முறையாகும். திருகுர்ஆனின் போதனைகளின்படியும் பரிசுத்த தூதர் முஹமது முஸ்தபா (ஸ)வின் முன்மாதிரிகைப்படியும் வாழ்ந்து காட்டவேண்டியவர்களே ஆவார்கள் அவர்கள். மனித வாழ்வின் உண்மையான நோக்கம் என்பது, திரு குர்ஆனின் பாடங்களின்படி விஷயத்தைப் புரிந்து கொண்டு ஏகனாகிய எல்லாம் வல்ல இறைவனை மட்டும் வணங்கி, வார்த்தைகேற்ப அனைத்து செயல்களையும் அவனுக்காக அவன் வழியில் அற்பணம் செய்வதும் ஆகும். அது கட்டாயவுமாகும். இஸ்லாமில் சஹீஹில் இஸ்லாம் என்றால் என்ன? அது எல்லா பொய் தெய்வங்களையும் நெருப்பிற்கு இரையாக்குவதும், நமது பொருளும் அந்தஸ்தும் அல்லாஹ்வின் வழியில் அற்பணம் செய்வதும் ஆகும். அதுவழியாக, இறை திருப்திக்கு தடங்கல் விளைவிக்கின்ற அனைத்து விதமான சோதனைகளிருந்தும் ஒரு நம்பிக்கையாளர் தன்னுடைய உள்ளத்தை தூய்மைப்படுத்துகின்றான்; பாதுகாக்கின்றான்.

ஜமா அத்துச்சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினராகிய ஒவ்வொருவரும் தங்களது வாழ்க்கையை, இஸ்லாமின் போதனைகளின்படி சீரமைக்க வேண்டும். இறைவனிடத்தில் அவன் வைத்துள்ள நிகரற்ற அன்பும் தூதுவ அரசன் முஹமது (ஸ) விடத்தில் வைத்துள்ள விலைமதிக்கயியலாத பண்பும் அவனது வாழ்க்கையின் எல்லா திசைகளிலும் பிரதிபத்துக் கொள்ளவேண்டும். ஆன்மீக பொறுப்புகளும், கடமைகளும் நிறைவேற்றிக் கொள்வதில் அவனது பொருளும் லௌகீகசுகவும் ஒரு பொழுதும் தடையாக கூடாது. இறைவனின் விருப்பத்திற்கு ஏற்றவார் உடலளவிலும் மனதளவிலுமான ஒரு சீரமைப்பே, அவனுடைய வாழ்க்கையில் முதல்மையும் முக்கியத்துவவும் வாய்ந்த பொறுப்பு அல்லது கடமை ஆகும்.

இந்த நூற்றாண்டின் கலீஃபத்துல்லாஹ் என்ற நிலையில் எனது கடமை மானிடகுலத்தை அனைத்தும் சீர்திருத்தலேயாகும். அஹ்மதி முஸ்லீம்களையும் மற்று முஸ்லீம்களையும் மட்டுமின்றி எல்லா மதபிரிவினரையும் சார்ந்த மக்களை இஸ்லாமிற்கு கீழ்படிந்துகொள்ள அழைப்பு விடுக்கின்றேன், அதை மக்கள் ஒத்துக்கொள்வதன் மூலமாகத்தான் மனுகுலத்திற்கு சீர்ப்படுதல் ஏற்படுவது.

ஜமா அத்துச்சஹீஹில் இஸ்லாமின் ஒரு உறுப்பினரின் சிறப்பான தன்மை, சஹீஹில் இஸ்லாம் அமைப்பிருந்து தவிர்த்துக் கொள்ள இயலாத வகையிலான ஒரு ஆழமான தொடர்பும், அன்பும் அதன்பால் இருக்கவேண்டும் என்பதாகும், இந்த இறை அன்பு அவனது வாழ்க்கையை நடத்தி செல்ல வேண்டும். இறை சட்டத்திருந்து சிறுதளவில் விலகிக்கொள்வது, அவனை பொறுத்தவரையில் முற்றிலும் வெறுப்பு விளைவிக்கின்ற விஷயமாக வேண்டும். லௌகீக விஷயங்களுக்கு ஒரு அணுஅளவிற்கான முன்தூக்கம் கொடுக்கின்ற நபரை, ஜமாஅத்துச் சஹீஹில் இஸ்லாமுடையவும் இந்நூற்றாண்டின் கலீஃபத்துல்லாஹ்வுடையவும் உண்மையான சீடனென்று எண்ணப்படுவதில்லை. அதாவது இஸ்லாமின் ஒரு சட்டத்தையோ தத்துவத்தையோ இவ்வுலக விஷயத்திற்காக புறக்கணித்துவிட கூடாது என்பதாகும். அதனால், ஜமா அத்து சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினரில் இஸ்லாமின் அடிப்படையான தத்துவங்கள் பிரதிபத்து காணவேண்டும் என்று மட்டுமின்றி ஏனையவர்கள் பயன் அற்றது என்று கருதுகின்ற நம்பிக்கையின் சிறந்த முக்கியத்துவம் இல்லாத விஷயங்களைக் அவன் கூட பாதுகாப்பவனாக இருக்க வேண்டும்.

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் ஒரு உறுப்பினர் எவ்வாறு இருக்க வேண்டும்.

1. **அவன் இஸ்லாமின் ஒரு படையாளியாக இருக்க வேண்டும.**
2. **அவன் இஸ்லாமின் ஒரு சிறந்த பொறுப்பாளியாக இருக்க வேண்டும்.**
3. **அவன் இஸ்லாமின் ஒரு தர்ம போதகராக இருக்க வேண்டும்**
4. **அவன் இஸ்லாமின் ஒரு தொண்டனாக இருக்க வேண்டும்**
5. **அவன் இஸ்லாமின் ஒரு இரட்சகனாக இருக்க வேண்டும்**
6. **அவன் இஸ்லாமின் உண்மை வடிவமாக இருக்க வேண்டும்**

# இஸ்லாமின் படையாளி

இஸ்லாமின் ஒரு படையாளிக்கு பலதரமான குணங்கள் இருக்க வேண்டும். முற்றிலும் அபாயமான நிலையிலும் இஸ்லாமிற்காக சேவைபுரிவதற்கும், போராடுவதற்குமான அவனது திறமை அக்குணங்களில் ஒன்றாகும். நாட்டிற்கும் கொடிக்குமாக அவனது சக்தியை முழுமையான தரத்தில் பயன்படுத்த வேண்டும். சஹீஹில் இஸ்லாமின் ஒரு உறுப்பினர் இறைவனின் படையாளியாவான். இஸ்லாமின் கொடிக்காக அவனது

வாழ்க்கையை அவன் அற்பணம் செய்திருக்கின்றான். அவனது நம்பிக்கையை பாதுகாப்பதற்காக அவன் சமாதானமான முறையில் போராடுகின்றான். ஒரு படையாளி என்ற நிலையில் மனைக்குள் மண்டிபோட்டு கிடக்கும் ஒரு முஸ்லீம் அல்ல அவன். எல்லா திசைகளிலும் அவனது ஆன்மீக ஆயுதத்தை சுழற்ற அவன் முயற்சிக்கின்றான். அவனது கடமைகளையும், பொறுப்புகளையும் நிறைவேற்றுவதற்காக அழைக்கின்றபோது அவனை பின்னோக்கம் ஈர்த்துக்கொள்ள எந்த சக்திக்கும் இயலாது. அது சூரியவெப்பத்திற்கானாலும் சரி, பனிகட்டைக்கானாலும் சரி, கொடும் மழைக்கானாலும் சரி, பனிக்காற்றுக்கானாலும் சரி, மற்றேதேனும் விஷயத்திற்கானாலும் சரி இவையொன்றும் அவனது முன்னேற்றத்திற்கு பிரதிபந்தமாகுவதில்லை. இஸ்லாமின்பாலுள்ள நிகரற்ற நேசம் காரணமாக எல்லாவித இன்னல்களையும் சகித்து கொள்ள அவன் ஆயத்தமாகயிருப்பான். உண்மையான நம்பிக்கை இருக்கின்றதா என்பதற்கான பரிசோதனையும் அடையாளவுமாகும் அது. கடந்த கால மஹாத்மாக்களின் வாழ்க்கை வரலாற்றிருந்து படிப்பினை பெற்று, அவ்வாறே பரிணமித்து விட கடினமான முயற்சிகள் மேற்கொள்கின்றோர்களே ஆவார்கள் ஒவ்வொரு சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினரும். முன் கடந்த மஹாத்மாக்களின் இயல்புகளை தங்களில் ஈர்த்துக்கொண்டு இஸ்லாமிற்காக அதிகமளவிலான ஆற்றலுகளுடன் போராடுவதற்கு அவன் ஆயத்தமாகின்றான்.

## இஸ்லாமின் சிறந்த பொறுப்பாளி

ஜமா அத்துச்சஹீஹில் இஸ்லாமின் ஒரு உறுப்பினருக்கு குறிப்பாக, மிக கௌரவம் வாய்ந்த பொறுப்புகள் உள்ளன. ஏனெனில் அவன் இந்நூற்றாண்டின் கலீஃபத்துல்லாஹ்வுடையவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹினுடையவும் பிரதிநிதியாவான். இந்நூற்றாண்டின் கலீஃபத்துல்லாஹ் என்ற நிலையில் எனது தோற்றத்தின் நோக்கம், இஸ்லாமின் ஒவ்வொரு போதனைகளையும் எனது தோழர்களுக்கு விளக்கமாக கற்பிக்கவும் அதை வாழ்க்கையில் அமல்படுத்துவதற்காக இறைவனிடத்தில் அவர்களை மன்றாட வைப்பதற்கும் ஆகும். ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் ஒவ்வொரு உறுப்பினரும் இஸ்லாமின் விலைவாய்ந்த பிரதிநிதியாவார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் உற்சாகத்தோடு இஸ்லாமின் போதனைகளை முழுமையாக கடைபிடிக்க வேண்டும். செயல்முறையில் கொண்டுவரப்படாத நம்பிக்கை மரணத்திற்கு சமமாகும் என்று கூறப்பட்டிருக்கின்றது. இதை நன்றாக உணர்ந்திருக்கும் ஒவ்வொரு சஹீஹில் இஸ்லாம் உறுப்பினர்களும் இஸ்லாமின் உண்மையான பாடங்களை மிக கவனத்தோடு பின்பற்றிட கடின முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். உலகின் கண்கள் உங்கள் மீதாகும். ஒரு அரசாங்கத்தின் பிரதிநிதி, அரசாங்கத்தின் செழிப்பிற்காக நம்பிக்கையோடு தனது பணியாற்றுகின்றான். அவ்வாறே ஜமா அத்துச்சஹீஹில் இஸ்லாமின் ஒவ்வொரு உறுப்பினரும், நம்பிக்கையோடு அவன் உட்பட்டிருக்கும் கொள்கையின் பிரதிபிம்பமாகயிருக்க வேண்டும்.

## இஸ்லாமின் தர்ம போதகர்

முழு மனித குலத்திற்கும் இறைசெய்தியுமாக தோன்றிய இறைதூதர் ஆவார் ஹஸ்ரத் முஹமது முஸ்தபா (ஸ) அவர்கள். ஆகவே, தனது நம்பிக்கையை ஏனையமக்களுக்கு எட்ட செய்ய வேண்டியது ஒவ்வொரு முஸ்லீம்களுடையவும் கடமையாகும். மட்டுமின்றி சில சூழ்நிலைகளில் தங்களுடைய முஸ்லீம் சகோதரர்களுக்கே வழிகாட்ட வேண்டியதாகவும் போதனைகள் வழங்க வேண்டியதாகவும் வருகின்றன. உண்மைக்காக ஒன்றுக்கொண்று உதவி புரிய திருகுர் ஆன் முஸ்லீம்களிடம் கட்டளையிடுகின்றது. இஸ்லாமின் தூதுச்செய்தியை உலகமெங்கும் பரவசெய்வதற்கும் அதன் உண்மை தத்துவத்தை

விளக்கிக்கொடுப்பதற்குமான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றது ஜமா அத்துச்சஹீஹில் இஸ்லாம். ஜமா அத்துச்சஹீஹில் இஸ்லாமின் ஒவ்வொரு உறுப்பினரும் இறைமார்க்கத்தின் பால் மக்களை அழைக்கின்ற வேலைகளில் முழுகியிருக்கின்றன. உலகில் சிறந்த நம்பிக்கை இதுதான் என்று மக்களுக்கு பகுத்தறிய வழிவகுக்கும் அளவிற்கான தர்ம போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள். இந்த தர்ம போதனைகளை வெற்றிகரமாக செய்வதற்கு அப்போதனைகளின்படி அவன் வாழ்ந்து காட்ட வேண்டியது அவசியமாகும். குர்ஆன் போதனைகளின் சுருக்கம் என்னவென்று அவர்கள் புரிந்திருக்கின்றார்கள். அதனால் இறைசெய்தியும் தர்ம போதனைகளும் எட்ட வைக்கும் கட்டத்தில் முற்றிலும் தேவையாக தங்களில் பிரதிபத்துக்கொள்ள வேண்டிய விஷயங்கள் என்ன என்பதை அவர்கள் அறிந்திருக்க வேண்டும்.

## இஸ்லாமின் ஒரு தொண்டன்

ஜமா அத்துச்சஹீஹில் இஸ்லாமின் ஒரு உறுப்பினர் அல்லாஹ்வின் தொண்டனாவான். ஒரு நல்ல தொண்டன் இரண்டு இயல்புகளால் பிரதிபத்து கொண்டிருப்பான். ஒன்று, அவன் கண்ணியமுள்ளவனாக இருப்பான். இரண்டு, அவன் கட்டுப்படுபவனாக இருப்பான். இஸ்லாம் நம்பிக்கையின் அடிப்படையில் மிக அவசியமாக இருக்க வேண்டிய இயல்பாகும் இறைவனிடமும் அவனது படைப்பினங்களோடுமுள்ள கண்ணியம். இறைபடைப்புகளில் ஒவ்வொன்றும் இறைவனின் படைப்புகளாகயிருப்பதால் அவ்வொவ்வொன்றுக்கு தேவையான கண்ணியம் வழங்க வேண்டியதாகும். ஒரு இறையடியான் என்ற நிலையில் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் ஒரு உறுப்பினர் இறைவனுக்கு பரிபூரணமாக கட்டுபடுகின்றவனாகயிருக்க வேண்டும். இறை கட்டளைகளுக்கு கட்டுப்படுவதில் அவன் முழுமையான ஜாக்கிரதையுள்ளவனாக இருக்க வேண்டும். இறைதிருப்திக்கு மாறான ஒரு செயல்களும் அவனிடத்தில் உருவாகாத வகையில் மிக கவனமாகயிருக்க வேண்டும். தொழுகையை குறிப்பிட்ட நேரங்களில் கடைபிடிக்க வேண்டும். சட்டத்திற்கு ஏற்றவார் விரதம் (நோன்பு) எடுத்து கொள்ள வேண்டும். இஸ்லாமின் சட்டப்படி அவன் சக்காத்தும் மற்றும் தானதர்மங்களும் வழங்க வேண்டும். அவ்வாறே இந்நூற்றாண்டின் கலீஃபத்துல்லாஹ்வின் வேண்டுகோளுக்கு ஏற்றவார் நன்கொடைகளும் வழங்க வேண்டும். சூதாட்டம், மது அருந்துதல், பன்றியிறச்சி புசித்தல், வட்டிக்கு பணம் கொடுத்தல், வட்டிக்கு பணம் வாங்கல், பொய்கூறுதல், வாக்குறுதியை தவிர்த்தல், ஏமாற்றுதல் மற்றும் விலக்கப்பட்ட விஷயங்களை மட்டுமின்றி முற்றிலும் பெரிய தவறாகிய இறைவனுக்கு பங்காளிகளை வைத்தல் போன்றவையிருந்தும் முழுமையாக விலகிக்கொள்ள வேண்டும். இறைவனுக்கு பரிபூரணமாக கட்டுப்படுதல் என்பதே அவனது அடிப்படையான நோக்கமாக இருக்க வேண்டும்.

## இஸ்லாமின் இரட்சகன்

அழகு வாய்ந்த இஸ்லாமின் பெயரின் மீது எல்லா பகுதிகளிருந்தும் அதன் விரோதிகள் அனுதினம் அக்கிரமம் செய்து கொண்டிருக்கின்றன. அவ்வாறு மேற்கொள்ளுவதற்கு காரணம் அவர்களின் அறியாமையும் முன்விதியும் தவறான தீர்மானங்களும் ஆகும். ஒரு வேளை மிக பெரிய அளவிற்கு தவறாக புரிந்து கொள்ளப்பட்ட மதம் இஸ்லாமே ஆகும். ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் ஒவ்வொரு உறுப்பினரும் இஸ்லாமை குறித்து மிக ஆழமாக படித்து கொள்ள வேண்டியதாகும். அது தனது மார்க்க வழிக்கும் உயர்வுக்கும் மட்டுமல்லாமல், இஸ்லாமை விமர்சனம் செய்வோர்களிருந்து இஸ்லாமை முழுமையாக பாதுகாப்பதற்காக ஆயத்தமாக இருப்பதுமாகும். ஆன்மீக ஆற்றல்கள் இழந்ததும் மனிதகரங்களால் தோற்றுவித்ததுமான ஒரு மதமே ஆகும் இஸ்லாம் என்று வாதம் எழுப்பப்படுகின்றது.

ஆனால் இவ்வாதத்திற்கு முரண்பாடுவிளைவிக்கும் வகையில் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் ஒவ்வொரு உறுப்பினர்களும் வாழ்ந்து காட்டுகின்றார்கள். இஸ்லாம் ஒரு உயிருள்ள மதம் என்று அவர்கள் நிருபிக்கின்றார்கள். ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் ஒரு உறுப்பினர் இஸ்லாமின் ஆன்மீக பலனை வெளிப்படுத்துவதற்கு தனது வாழ்க்கையை ஒரு சிறந்த முன் மாதிரிகையாக்கி காட்டிட கடினமான உழைப்பை மேற்கொள்ள வேண்டும். இஸ்லாமாக வாழ்ந்திருப்பது மூலமாக ஜமாஅத்துச் சஹீஹில் இஸ்லாமின் ஒரு உறுப்பினர் இஸ்லாமின் ஒரு நல்ல இரட்சகனாக விளங்குகின்றான்.

## இஸ்லாமின் உண்மை வடிவம்

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் ஒரு உறுப்பினர் நிச்சயமாக ஒரு முஸ்லீம் ஆவான். அவனது உள்ளம் அற்புதமான ஆன்மீக உண்மைகளால் நிறைந்திருக்கின்றது. இந்த உண்மைகள் அவன் உள்ளத்தை ஆழமான அளவில் ஈர்த்துக்கொண்டிருக்கும். தனக்கு தேவையானதெல்லாம் இறை சன்னிதியில் இருந்து தேடிக்கொண்டு அவன் ஆன்மீக அமைதியை அடைகின்றான். ஆனால் இந்த விஷயம் மற்றவர்களுக்கு முன்னால் முற்றிலும் மறைக்கப்பட்டதாக இருக்கும். மனிதன் என்ற நிலையில் தனது குடும்பத்தினரோடும் உறவினர்களோடும், நண்பர்களோடும் இயற்கை நீதிக்கு உட்பட்ட தரத்திலான ஒரு தொடர்பு அல்லது அன்பு நிச்சயமாக அவனுக்கு இருந்து விடும். இந்த உணர்ச்சி அல்லது ஆவேசம் இந்த பந்தங்களில் இருந்து விட்டாலும் அவன் ஒரு பொழுதும் இறைவனிடத்திலுள்ள அவனது திடபக்தியை மறந்து விடுவதில்லை. இறைவன் அவனை தனது குடும்பத்தின் நபர்களுமாக சோதனைக்கு ஆளாக்குவான். தனது குடும்ப நபர்கள் இறைவனையும் இந்நூற்றாண்டின் இறைதூதனையும் நிராகரித்து விடுகின்றவர்களாயிருந்தால், எவரையாகும் அவன் ஏற்றுக்கொள்ளவும், நிஜப்படுத்தவும் செய்துள்ளானோ (அல்லாஹ்வையும் அவனது கலீஃபத்துல்லாஹ்வையும்) அப்போது அவனுக்கு நன்றாக தெரியும் மற்று எவரைவிடவும் அவனது உள்ளத்தில் முன்தூக்கம் வழங்கவேண்டியது அல்லாஹ்வுக்கும் அவனது கலீஃபத்துல்லாஹ்வுக்கும் ஆகும் என்பது. அவனது தந்தையாரை விட, அவனது தாயாரைவிட, அவனது உறவினர்களைவிட, ஆகவே ஜமா அத்துச்சஹீஹில் இஸ்லாமின் ஒரு உறுப்பினர் உண்மையான பொருளில் ஒரு படையாளி ஆகிவிட்டால், ஒரு சிறந்த பொறுப்பாளி ஆகிவிட்டால், ஒரு தர்ம போதகராக ஆகிவிட்டால், ஒரு உண்மைத் தொண்டனாக ஆகிவிட்டால், ஒரு சேவகனாக ஆகிவிட்டால், ஒரு இரட்சகனாக ஆகிவிட்டால் அப்போது மட்டுமே அவன் இஸ்லாமின் உண்மை வடிவமாக பிரகாசிப்பது. உண்மையாக, அல்லாஹ்வுடையும் இந்நூற்றாண்டின் அவனது கலீஃபாவுடையவும் நோக்கத்தில், அப்போது இறைவன் அவனது, கண்களாக மாறிவிடுவான். அவன் அந்த கண்கள் மூலமாக பார்வையிடுகின்றான். இறைவன் அவனது நாவாக மாறிவிடுவான். அந்த நாவுவழியாக அவன் பேசுகின்றான், இறைவன் அவனது கையாக மாறிவிடுவான். அந்த கைகளால் அவன் எதிர்த்து நிற்கின்றான். இறைவன் அவனது செவியாக மாறிவிடுவான். அச்செவியால் அவன் கேட்கின்றான். இறைவன் அவனது கால்களாக மாறிவிடுவான். அக்கால்களால் அவன் பயணம் செய்கின்றான்.

உங்கள் அனைவருக்கும் இறைவன் அருள்புரிவானாக, **“த பி ஃ க்”**கின் மிக முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள இறைவன் உதவி செய்வானாக. அதன்படி நீங்கள் ஒவ்வொருவரும் உண்மையான உணர்வோடும் தூய இதயத்தோடும் இறைவன்பால் மக்களை அழைக்கின்றவர்களாக மாறட்டும். எனது பிரார்த்தனைகளை ஏற்று கொள்வாயாக இறைவா.

Issued by: R. Jamaludin Raother Amir (South Zone)
Jamaat-UI-Sahih-Al Islam, Kerala (Regd) India.
Email: jamal.raother@gmail.com
Web: www.jamaat-ul-sahih-al-islam.com
**Phone: 09447001832**

**Translated by
Azim Ahmad
Sadr Sahibul Faraj
Kerala/ TamilNadu
09789180817**